| | | | |
|---|---|---|---|
| Headline | TNB prepares for flood season | | |
| MediaTitle | Malaysian Nanban | | |
| Date | 08 Nov 2019 | Language | Tamil |
| Circulation | 65,000 | Readership | 415,000 |
| Section | News | Page No | 7 |
| ArticleSize | 257 cm² | Journalist | NULL |
| PR Value | RM 4,486 | | |
| | | | |



# வெள்ளத்தை எதிர்கொள்ள டி.என்.பி. முன் நடவடிக்கை

கோலாலம்பூர், நவ.8-

இந்த மழைக் காலத்தில் நிறுவல்களுக்கு ஏற்படக்கூடிய சேதத்தைக் குறைப்பது உட்பட வெள்ளத்தை எதிர்கொள்வதற்கான முன்நடவடிக்கைகளைத் தேசிய மின்சார வாரியம் (டி.என்.பி.) மேற்கொண்டு விட்டதாக அதன் விநியோக வலையமைப்புக்கான தலைமை அதிகாரி, டத்தோ பாஹாரின் டின் தெரிவித்தார்.



இதில் ஒருசில குறிப்பிட்டப் பகுதிகளுக்கு மொபைல் ஜெனரேட்டர்கள், சிறிய ஜெனரேட்டர்களை ஏற்படுத்தி உள்ளது மட்டுமின்றி வெள்ளத்தை எதிர்கொள்வதற்கான பயிற்சிகளும் நடத்தப்படும்.

இம்மாதிரியான முறையான ஏற்பாடுகள் வெள்ளத்தை முறையாக, சிறப்பாக எதிர்கொள்வதற்கு மேற்கொள்ளப்படுகின்றன என்று ஓர் அறிக்கையில் டத்தோ பாஹாரின் டின் குறிப்பிட்டார்.

இதனிடையே, மரம் சாய்ந்ததால் ஏற்படும் மின் துண்டிப்பை உடனடியாக இணைக்கும் பொருட்டு டி.என்.பி.இன் அவசர நடவடிக்கைக் குழு ஒரு நாளைக்கு 24 மணி நேரமும் செயல்படும்.

அப்படி மின்நிலையங்கள் ஏதேனும் வெள்ளத்தில் மூழ்கி விட்டால் நிலைமை சீரடைந்த பின்னர்தான் அதற்கான மறு இணைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதில் மின்சாரக் கையிருப்புக் குறித்த புத்தம் புதிய தகவல்களை வழங்குவதோடு நிலைமையையும் கண்காணிப்பதற்கு ஏதுவாக அனைத்து மாநிலங்களிலும் வெள்ள நடவடிக்கை அறையை டி.என்.பி. திறக்கும்.

அதனால் வெள்ளத்தின் போது மின்சாரம் துண்டிக்கப்பட்டால் 15454 என்ற எண்ணில் டி.என்.பி.யைத் தொடர்புக் கொள்ள வேண்டும் என்று பயனீட்டாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுவதாக ஓர் அறிக்கையில் டத்தோ பாஹாரின் டின் குறிப்பிட்டார்.

Powered by: iSENTIA